2024 பிப்ரவரி 15]

பயிர்ச் சேதம் மற்றும் மனித–வன விலங்குகள் மோதலைத் தடுக்க முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 109 கிலோ மீட்டர் தூரத்திற்கு சோலார் மின்வேலிகள் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாவட்ட வன அலுவலர் அவர்களின் கருத்துரு பெற்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

சாலை வசதி

***51564—திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, கீரிப்பட்டி ஊராட்சி, கீரிப்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிக்கு சாலை வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–10

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, கீரிப்பட்டி ஊராட்சி, கீரிப்பட்டி ஆதி திராவிட மக்கள் குடியிருப்புக்கு வடக்குப் புறமாக உள்ள சாலை மிகவும்

பழுதடைந்த நிலையில் இருந்ததால், புதிதாக சாலை அமைக்க நடப்பு நிதியாண்டில், அதாவது 2023–2024 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.11,08,000/– மதிப்பீட்டில் 205 மீட்டர் paver block சாலை அமைப்பதற்குப் பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, ஜல்லிக்கட்டு நாயகன் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீரிப்பட்டி ஊராட்சி, கீரிப்பட்டி கிராமம் சுமார் 300 குடியிருப்புகளைக் கொண்ட ஆதி திராவிடர் பகுதி. அந்த கீரிப்பட்டி கிராமம், கீரிப்பட்டி ஊராட்சி, ஆதி திராவிடரை ஊராட்சித் தலைவராகக் கொண்டது. 1996–ல் கீரிப்பட்டி ஊராட்சி தனித் தொகுதியாக அறிவிக்கப்பட்டு, உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, அந்தப் பகுதி மக்கள் அந்தத் தேர்தலைப் புறக்கணித்தார்கள். 2001–ல் மீண்டும் உள்ளாட்சித் தேர்தலை நடத்தியபோதும், மீண்டும் புறக்கணிக்கப்பட்ட நேரத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அண்ணன் ஓ.பி.எஸ். தலைமையில் 6 அமைச்சர்களைக் கொண்ட குழு நேரடியாகச் சென்று அந்தத் தேர்தலை நடத்தியது. (குறுக்கீடு) இது மக்களின் கோரிக்கை; கொஞ்சம் பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடத்தப்பட்ட பிறகு ஒரு மாதக் காலத்தில். . .

2024 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சாலை கேட்டீர்கள். 2023–2024 ஆம் ஆண்டில் அங்கே* paver block *போடச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்தான் தலைவராக இருக்கிறார். அதனால்தான் இதனை நான் பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பஞ்சாயத்துத் தலைவர் தமிழர் தானே இருக்கிறார்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் பேசிக்கொள்கிறேன். தேர்தல் நடத்திய ஒரு மாத காலத்திலேயே அந்தக் குழு கலைக்கப்பட்டுவிட்டது; இராஜினாமா செய்து விட்டார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வரலாறை உங்களிடம் கேட்கவில்லை. எப்படி கீரிப்பட்டி ஊராட்சியில், ஊராட்சி மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதைக் கேட்கவில்லை. இப்போது அந்தப் பஞ்சாயத்துக்கு என்ன தேவை என்பதை அவர்களிடம் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. ஐ.பி. அண்ணனிடம் கேட்டால்தான் அதற்குப் பதில் சொல்வார்கள். நீங்கள் கேட்க வந்தது, ஆதி திராவிடர் நலத் துறையிடம்; அதனை மட்டும் கேளுங்கள். இதுவரை பேசியதை மறந்துவிடுங்கள்; கேள்விக்கு வாருங்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *மீண்டும் 2006–ல் நடத்தப்பட்டு, தொடர்ந்து தலைவர் இருக்கின்றார். (குறுக்கீடு) ஒரு நிமிடம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டிக்கு தேர்தல் நடத்தி, ஜனநாயகத்தை நிலைநாட்டிய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், கேள்வியைக் கேளுங்கள்.*

[2024 பிப்ரவரி 15

திரு. பி. அய்யப்பன்: தொடர்ந்து ஆதி திராவிடர், ஊராட்சி மன்றத் தலைவராகச் செயல்பட்டு வருகிறார். ஆனால் நான் கேட்பது, Anaithu Grama Anna Marumalarchi Thittam (AGAMT) மூலமாக சாலை போடப்படுகின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அந்த நிதி ஒதுக்கப்படவில்லை. AGAMT மூலமாக வேறு பகுதிக்குப் போட்டிருக்கிறார்கள். நான் கோரிய அந்தச் சாலைக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. மேலும், அந்தப் பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும். அந்தப் பகுதியில் பழுதடைந்து, இடிக்கப்பட்ட, சமுதாயக் கூடத்தையும் கட்டித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, நிதி ஒதுக்கப்படாமல் இல்லை; நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சாலையில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மார்ச் 31-க்குள் பணிகளை முடிக்கச் சொல்லியிருக்கிறோம். கண்டிப்பாக அந்தப் பணிகள் நடைபெறும். அதேபோல், பழுதடைந்த சமுதாயக் கூடத்தைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். சமுதாய நலக் கூடத்தைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே நாம் TAHDCO மூலமாகக் கட்டிக் கொடுத்திருந்தாலும், நிறைய சமுதாயக் கூடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஏற்கெனவே எடுத்துச் சென்றிருக்கிறோம். புதிதாக சமுதாயக் கூடங்கள் கட்டுவதாக இருந்தாலும் சரி அல்லது ஏற்கெனவே உள்ள சமுதாயக் கூடங்களில் பராமரிப்புப் பணி செய்வதாக இருந்தாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, கண்டிப்பாக நிறைவேற்றித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள்.

2024 பிப்ரவரி 15]

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரிப்பட்டி ஊராட்சிக்கு அடிப்படை பணிகள் செய்து தருவதோடு, ** அத்தனை கிராமங்களிலும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இதனை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். நீங்கள்* particular *ஊராட்சிக்கு என்ன வேண்டுமென்பதை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய நிதி, ஆதி திராவிட மக்களுக்குத்தான் அதிகமாகக் கொடுக்கிறோம். நம்முடைய அரசு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து, எல்லா அடிப்படை வசதிகளையும், எல்லா ஊராட்சிகளுக்கும், 12,525 ஊராட்சிகளுக்கும், எந்தவித பாகுபாடும் இல்லாமல் மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களால், மக்கள்தொகை அடிப்படையில் நிதிப் பகிர்வு தெளிவாக, சமமாக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்டுவிட்டீர்கள், அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)*

திரு. பி. அய்யப்பன்: *துணைக் கேள்வியைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, கேளுங்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இ.கோட்டைப்பட்டி ஊராட்சி, வடக்கத்தியான்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி சுமார் 70 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அங்கு ஒரேயொரு வகுப்பறைக் கட்டடம்தான் இருக்கிறது. மேலும், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி எதுவும் இல்லை. அதேபோல், சாப்டூர் ஊராட்சி. . .*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2024 பிப்ரவரி 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது. அதையும், நான் அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடு) சரி, கேட்டு முடியுங்கள்.

திரு. பி. அய்யப்பன்: அது ஆதி திராவிடர் பகுதிக்குட்பட்டது. சாப்டூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் ஆரம்பப் பள்ளி சுமார் 70 மாணவச் செல்வங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அங்கு பழைய கட்டடம் இடிக்கப்பட்டு, சமுதாயக் கூடத்தில் அந்த ஆதி திராவிடர் ஆரம்பப் பள்ளி செயல்பட்டு வருகிறது. வண்டாரி ஊராட்சி, மெய்யனுத்தம்பட்டியில் ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு 110 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். அதற்கு மூன்று வகுப்பறைகள் மட்டும்தான் இருக்கின்றன. அந்த உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடங்கள், மாணவர்களுக்குக் கழிப்பிட வசதி, அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் வேண்டிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள்!

திரு. பி. அய்யப்பன்: அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள், தொடர்ச்சியாக அவருடைய கோரிக்கைகளை வைத்து வருகிறார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், கடந்த 2023 ஆம் ஆண்டில் அனைத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும் 6,000 வகுப்பறைகளைக் கட்டுவதற்காக ரூ.800 கோடி நிதியைக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்போது எழுதிக் கொடுங்கள். பழுதடைந்ததையும் நாங்கள் பழுதுபார்த்துக் கொடுத்திருக்கிறோம். இப்போது வகுப்பறைகள், கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட சில கோரிக்கைகளைக் கேட்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். அதுசம்பந்தமாக நிச்சயம் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுத்துபூர்வமாகக் கேட்டிருக்கிறார்கள். அதன்படி எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

2024 பிப்ரவரி 15]

அவையனைத்தும் பரிசீலிக்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிப்படை வசதிகளை ஏற்கெனவே கேட்டிருக்கிறார்கள். 2018–2019 ஆம் ஆண்டிலிருந்து ஊரக வளர்ச்சித் துறை மூலமாக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிப்படை வசதிகள் ஒவ்வோராண்டும் செய்துகொண்டு வருகிறோம். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, சென்ற நிதியாண்டில் “அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்” என்கிற ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதற்கென ஊரகப் பகுதிகளுக்கு ரூ.100 கோடி, நகர்ப்புறங்களுக்கு ரூ.50 கோடி, பேரூராட்சிப் பகுதிகளுக்கு ரூ.50 கோடி என வருடத்திற்கு ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு, முக்கியமாக, மக்கள்தொகை அடிப்படையில் இந்தப் பணிகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. இந்த வருடத்திற்கான பணிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன. கூடியவிரைவிலே அந்தப் பணிகள் அனைத்தும் தொடங்கப்படும். அதேபோல, பள்ளிக் கட்டடங்கள் சீரமைப்பு குறித்து கூறியிருக்கிறார்கள். அவர் எந்தப் பள்ளிக்கூடத்தில் என்ன வசதி வேண்டுமென்று விரிவாக எழுதிக் கொடுத்தால், அதை துறையின் மூலமாக கண்டிப்பாக நிறைவேற்றித் தருவோம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல் 1 மற்றும் 2)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

@ *93 முதல் 260 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.*